[24th September 1958

Drinking water-supply in Theni firka

*472 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, தேனீ தொகுதியில், ஸ்ரீரங்கபுரம், பாலகிருஷ்ணபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களுக்கு குடி தண்ணீர் பம்பு வைக்க கோரிக்கை ஏதேனும் வந்ததுண்டா ? அப்படியானால் அது எப்பொழுது நிறைவேற்றப்படும்.?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. Estimates for the construction of overhead tanks in the villages are under technical scrutiny.

SRI N. R. THIAGARAJAN : ஸார், சென்ற 18 மாதங்களாக, 3 திட்டங்கள் மாத்திரமல்லாமல், 30 திட்டங்கள் கலெக்டர் ஆபீஸில் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளைச் சீக்கிரமாக அனுப்பும்படி கலெக்டருக்கு எழுதி உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமா ? தமிழகத்தில் மொத்தம் 27 லட்சம் ரூபாயில், மதுரை ஜில்லாவிற்கு 53 ஆயிரம் ரூபாய் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இனியாவது சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏற்கெனவேயே கலெக்டர் இதைப்பற்றி வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஸ்ரீரங்கபுரத்திற்கு 28,000 ரூபாய்க்கு டெக்னிகல் ஸேங்ஷன் அனுப்பப்பட்டிருக்கிறது. பாலகிருஷ்ணபுரத்திற்கு அஸிஸ்டெண்ட் என்ஜினீயரை எஸ்டிமேட் போடச் சொல்லியிருக்கிறோம். அம்பாசமுத்திரத்திற்கு 23,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டு எடுத்துக்கொள்ள பிரயத்தனப்படுகிறது.

Dam across Vaipparu in Sattur taluk

*473 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a dam across Vaipparu in Sattur, Ramanathapuram district?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : தமிழகத்திலே ஒரு பெரிய நதியாகிய வைப்பாறு சமுத்திரத்தில் போகிறது. இந்த ஆற்றின் மீது அணை கட்டுவதைப்பற்றி பரிசீலனை செய்து திட்டத்தை நிறைவேற்றுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. கண்மாய், குளங்கள் மூலமாக எவ்வளவு தண்ணீர் கொடுக்கமுடியும் என்று பார்த்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்ததில், 1941–44-லிலும், 1951–52-லும் தண்ணீர் வந்ததைப் பார்த்தபோது மிகவும் குறைவாக இருந்ததால் திட்டத்தை எடுத்துக்கொள்ளவில்லை. கண்மாய், குளங்கள் மூலமாகத் தண்ணீர் கொடுப்பதற்கு 3 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டது. அதனால் 150 ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாயலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதுவும் செலவு அதிகப்படியாக ஆவதினால் பரிசீலனை செய்து கைவிடப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Darangadhara Chemical Works

9-20 a.m. *474 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any representation has been made for the supply of electricity to the Darangadhara Chemical Works that is to be established in the Tirunelveli district; and

(*b*) the details of the action taken thereon?

24th September 1958]

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The Madras State Electricity Board has agreed to give, subject to the usual staggering, etc., restrictions, H.T. supply to the works up to a maximum demand of 32,000 K.W. after the commencement of operation of the Periyar Power Station and also after the construction of the 110 K.V. line from Periyar to Arumuganeri.

SRI M. S. SELVARAJAN : உத்தேச மின்இணைப்பு திட்டத்தின் செலவு என்ன ? என்னென்ன நிபந்தனைகளுக்குட்பட்டு இது அனுமதிக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : "தாரங்கதரா" என்பது என்ன என்று விளங்கவில்லை.

THE HON. SRI V. RAMAIAH : அது கம்பெனியின் பெயர்.

Velanganni-Vedaranyam Road

* 475 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேளாங்கண்ணி-வேதாரண்யம் ரஸ்தா கப்பி போடும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) இந்த ரஸ்தாவில் உள்ள கள்ளிமேடு கிராமத்தில் அடைப் பாற்றுக்குப் பாலம் கட்டும் வேலை துவக்கியாகிவிட்டதா ? இல்லையானால், எப்போது ஆரம்பமாகும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The detailed estimate for the work has been sanctioned and the work will be taken up for execution during the current year.

(b) No, Sir. The detailed estimate for the work has been finalised. As soon as it is sanctioned by the competent authority, steps will be taken to execute the work expeditiously.

SRI A. VEDARATHNAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் இந்த ரஸ்தாவுக்கு "டாப் பிரையாரிட்டி" கொடுக்கப்பட்டிருந்தும், இப்பொழுது இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஒரு வேலையும் நடக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இப்படியே காலத்தைக் கடத்தி இந்தத் திட்டத்தை கைவிட்டுவிடவேண்டுமென்ற உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1957–58-ல் இந்த வேலையை "கிராண்ட்ஸ் வொர்க்ஸ்"-ன் கீழ் எடுக்கும்படியாகத் திட்டம் இருக்கிறது. முதலில் போட்ட எஸ்டிமேட்படி 11·6 லட்சம் செலவாகும். ஆனால் ஒதுக்கி யிருக்கும் தொகை ரூ. 3·1 லட்சம். ஆனால், இப்பொழுது திரும்பவும் ரிவைஸ் செய்து ரூ. 5·3 லட்சம் ஆக கணக்கிடப் டிருக்கின்றது. இதை என்ன முறையில் செய்யலாம் என்பதைப்பற்றி தலைமை எஞ்சினியர் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.